நெல்லிமரம் திருமாலின் அருள் பெற்றது. ஹரிபலம் என்றே இதற்கு பெயர். ஒரு வீட்டில் நெல்லிக்கனி இருக்குமானால் மகாலட்சுமி நித்தியவாசம் செய்கின்றாள். நெல்லிக்காயால் ஆரோக்கியத்துடன் புண்ணியமும் கிட்டும். வெள்ளிக்கிழமை- களிலும், இரவிலும் நெல்லிக்காய் உண்ணக்கூடாது. நெல்லிமர நிழலில் அன்னமளிப்பது மிகவும் விசேஷம். துவாதசி அன்று நெல்லிக்காயை உணவில் சேர்த்தால் தான் ஏகாதிசிப்பலன் உண்டு.

திருமதி. பத்மாவதி சுப்பராமன்
கொள்கை பரப்பு செயலாளர்

பாண்டிச்சேரி அட்சயாவின் சார்பில் வெளியிடும் தமிழ் புத்தாண்டு
பஞ்சாங்கத்தை தொகுத்து அளித்த பிரபல ஜோதிடர்
திரு. K. சுந்தரராஜ சர்மா அவர்களுக்கு எங்கள் மனமார்ந்த வாழ்த்துக்கள்

Mr. Dachinamoorthy
19, Karunakara Pillai Street,
D.R. Nagar, Kosapalayam, Puducherry-13.
Ph. : (0413) 4208118
Cell : 97915 49599

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

விடியற் காலை எழுவதால் பலன்கள்

காலையில் சூரிய உதயத்திற்குமுன் எழவேண்டும். இதை முதல் ஒழுக்கம் என ஆசாரக் கோவை கூறுகிறது. வேதங்களும் இதையே வலியுறுத்துகின்றன. இந்து மத சாஸ்திரங்கள் பிரம்ம முகூர்த்தத்தில் எழவேண்டும் என கூறுகின்றன.காலை 4.00 மணி முதல் 5.00 மணிவரை 'பிரம்ம முகூர்த்தம்' என்று பெயர். அப்பொழுது விழித்துக் கொண்டு எழுந்திருக்க வேண்டும். முதலில் சிரமமாக இருந்தாலும் பிறகு பழகிவிடும். இப்படி செய்வது நீண்ட ஆயுளையும், ஆரோக்கியத்தையும், தேஜஸ்ஸான உடலையும் கொடுக்கும். இந்த நேரத்தில் தேவர்களும், முன்னோர்களும் நம் வீட்டை நோக்கி வருகிறார்கள். அப்பொழுது விழித்திருந்து மனதால் அவர்களை வழிபட்டால் அவர்கள் சந்தோஷப்பட்டு நமக்கு நன்மை செய்வார்கள்.

காலையில் சொல்ல வேண்டிய 1) **சூரிய காயத்ரி :** பாஸ்கராய வித்மஹே மஹத் விதி கராய தீமஹி தன்னோ ஆதித்யப் ப்ரசோதயாத்.

2) **சூரிய மந்திரம்:** 'ஓம் திகைராய பாஸ்கராய ஜ்யோதிஸ்வரூபாய சூரிய நாராயணாய தேவாய நமோ நம:'

3) காலை மாலை இருவேளை நீராடி விட்டு தூய்மையான உடை அணிந்து கடவுளை வணங்க வேண்டும். நீராடும் பொழுது புண்ணிய நதிகள் நினைத்துக் கொண்டு கீழ்காணும் மந்திரங்களைச் சொல்ல வேண்டும்.

'கங்கே சயமுனே சைவ கோதாவரி ஸரஸ்வதி
நர்மதே ஸிந்து காவேரி ஜலேஸ்மின் ஸன்னி தம் குரு'

நர்மதை, சிந்து, காவேரி, கோதவரி, சரஸ்வதி, யமுனை, கங்கை ஆகிய புண்ணிய நதிகள் இந்த நீரில் வாசம் செய்யட்டும்.

4) ஆயிரம் மைல்களுக்கு அப்பால் இருந்து எவன் கங்கையைத் துதிக்கிறானோ அவன் விஷ்ணு லோகம் செல்கிறான் என்று கீழ்கண்ட சுலோகம் தெரிவிக்கிறது.

'கங்கா கங்கேதி யோப் ரூயாத் யோஜனானாம் சதைரபி
முஸ்யதே ஸர்வ பாபேப்ய விஷ்ணு லோகம் ஸகஸ்சதி'

5) திரு மாங்கல்யத்தில் இணைக்கப்பட்டுள்ள ஒன்பது பிரிநூல்கள் உணர்த்தும் வாழ்வியல் உண்மைகள் : 1. வாழ்வை உள்ளது உள்ளபடி உணர்த்தல், 2. மேன்மை, 3. ஆற்றல், 4. தூய்மை, 5. தெய்வீகத் தன்மை, 6. உத்தம குணம், 7. விவேகம், 8. தன்னடக்கம், 9. தொண்டு.

6) கோவிலுக்கு வழங்கப்படும் வேறு பெயர்கள் : 1. தேவக்கிரகம், 2. திருக்கோவில், 3. தேவாகாரம், 4. தேவாயதனம், 5. தேவாலயம், 6. தேவமந்திர், 7. தேவஸ்தானம், 8. அர்ச்சாக்ரகம், 9. கோட்டம்

7) **துர்க்கையின் ஒன்பது அம்சங்கள் :** 1. வனதுர்க்கை, 2. சூலினி துர்க்கை, 3. ஜாதவேதோ துர்க்கை, 4. ஜவாலாதுர்க்கை, 5. சாந்தி துர்க்கை, 6. சபரி துர்க்கை, 7. தீப துர்க்கை, 8. ஆகரி துர்க்கை, 9. லவன துர்க்கை.

8) **அஷ்ட லக்ஷ்மிகள் :** 1. ஆதிலக்ஷ்மி, 2. மஹாலக்ஷ்மி, 3. தனலக்ஷ்மி, 4. தான்ய லக்ஷ்மி, 5. சந்தானலக்ஷ்மி, 6. வீரலக்ஷ்மி, 7. விஜயலக்ஷ்மி, 8. கஜலக்ஷ்மி.

9) **அஷ்ட சரஸ்வதி :** 1. வாகீஸ்வரி, 2. சித்ரேஸ்வரி, 3. துளஜா, 4. கீர்த்தீஸ்வரி, 5. அந்தரிட்ச சரஸ்வதி, 6. கடசரஸ்வதி, 7. நீல சரஸ்வதி, 8. கினிசரஸ்வதி

சரஸ்வதிக்கு தனியாக ஆலயம் நாகை மாவட்டம் கூத்தனூரில் உள்ளது. சரஸ்வதியை 'ஆற்றங்கரை சொற்கிழுத்தி' என பழைய தமிழ் நூல்கள் போற்றுகின்றன.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

10) கொடிமரத்தின் முக்கியத்துவம்

ஆலய அமைப்பில் கொடிமரம் சூட்சம லிங்கம் என அழைக்கப்படுகிறது. அசுரர்களை அகற்றும் பொருட்டும், கடவுளையும், தேவர்களையும் அழைத்தற் பொருட்டும், கோவிலையும், பக்தர்களையும் பாதுகாக்கவும் கொடிமரம் நிறுவப்படுகிறது.

11) நாம் வழிபட வேண்டிய முறைகள் :

1. அறிவும், வீரியமும், அழகும் பெற முருகப் பெருமானை வணங்கலாம்.
2. ஆற்றலைப் பெருக்கிக் கொள்ள ஆஞ்சநேயரை வணங்கலாம்.
3. குடும்ப செழிப்பைப் பெற திருமகளை வணங்கலாம்.
4. யோக சக்தியையும், மந்திர சக்தியையும் பெற ஆதி பராசக்தியை வணங்கலாம்.
5. கலையை, கல்வி செல்வத்தைப் பெற சரஸ்வதியை வணங்கலாம்.
6. யோகத்தில் சிறப்பு பெற பரமேஸ்வரனை வணங்கலாம்.
7. வெற்றி மேல் வெற்றி பெற ராஜ கணபதியை வணங்கலாம்.
8. குடும்பத்தை வாட்டிடும் இன்னல்கள் தீர மாரியம்மனையும், காளியம்மனையும் காமாட்க்ஷியையும் வணங்கலாம்.
9. சத்புத்திரனைப் பெற செந்தில் ஆண்டவனை வணங்கலாம்
10. இவ்வுலகத்தில் எல்லா இன்பங்களையும் பெற திருமாலை வழிபடலாம்.

தொகுப்பு : திருமதி. பத்மாவதி சுப்பராமன்
கொள்கை பரப்பு செயலர், பாண்டிச்சேரி அட்சயா

செவ்வாய் தோஷம் பற்றிய விசேஷ விதிகள் :

செவ்வாய் தோஷம் : தோஷம் என்கின்ற சமஸ்கிருத சொல்லுக்கு இடைஞ்சல் (இடர்பாடு) என்பது பொருள். செவ்வாய் உதிரகாரகள் ஆவான். எனவே ரத்தசம்மந்த வகையில் இடர்பாட்டை, தெரிவிப்பது செவ்வாய் தோஷம் ஆகும்.

லக்கினம், ராசி (சந்திரன் நின்ற ராசி) சுக்கிரன் நின்ற ராசிக்கு செவ்வாய். 2, 4, 7, 8, 12ம் ஆகிய இடங்களில் இருந்தால், செவ்வாய் கீழ்கண்ட விதிவிலக்குகளுக்கு மீறி இருந்தால் செவ்வாய் தோஷமாகும். இந்த தோஷம் தம்பதிகள் இருவரில் ஒருவருக்கிருந்து, மற்றவருக்கு இல்லாமலிருந்தால் திருமணம் செய்யக்கூடாது.

1. செவ்வாய் தனது சொந்த வீடான, மேஷம் விருச்சிகத்திலிருந்தால் தோஷம் இல்லை.
2. செவ்வாய்க்கு தனது உச்சவீடான மகரத்தில் இருந்தால் தோஷம் இல்லை.
3. சூரியன், குரு, சனி, புதன், ராகு, கேது இவர்களுடன் சேர்ந்தாலும், பார்த்தாலும் தோஷம் இல்லை.
4. சந்திரனுடன் சேர்ந்தால் தோஷம் இல்லை.
5. கும்பத்தில் செவ்வாய் இருந்தால் தோஷம் இல்லை.
6. ஒளிக்கிரகமான சிம்மம், கடகத்தில் பிறந்தவர்க்கு செவ்வாய் தோஷம் கிடையாது.
7. செவ்வாய் தன் மித்திரர்களான, சூரியன், சந்திரன், குரு இவர்கள் வீட்டிலிருந்தால் தோஷம் இல்லை.
8. செவ்வாய் இரண்டாமிடத்திலிருந்து அது மிதுனம் கன்னியாகில் தோஷம் இல்லை.
9. 12ம் இடம் ரிஷபம் துலாமாகில் தோஷம் இல்லை.
10. செவ்வாய் இருக்கும் இராசியின் அதிபதி 1, 4, 5, 7, 9, 10 இந்த ஸ்தானத்தில் இருந்தாலும் தோஷம் இல்லை.

எனவே மேற்கண்ட கிரக அமைப்பில் உள்ள ஜாதகங்களின் நிலையை அறிந்து செவ்வாய் தோஷமா இல்லையா என்பதை துல்லியமாக கண்டு பயனடையலாம்.

அருள். கருணாகரன், ஜோதிடர்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

பஞ்சாங்க சிரவண பலன்

1. திதியைச் சொல்வதால் ஐஸ்வர்யம் கிடைக்கும்.
2. வாரத்தினைக் குறிப்பிடுவதால் ஆயுள் வளரும்.
3. நக்ஷத்திரத்தைக் குறிப்பிடுவதால் பாபம் நீங்கும்.
4. யோகத்தைக் கூறுவதால் வியாதி குணமாகும்.
5. கரணத்தைச் சொல்வதால் நினைத்த காரியம் நிறைவேறும்.

தற்போது நடைமுறையிலுள்ள பஞ்சாங்கங்கள் சில

1. ஸ்ரீ காஞ்சி மடத்து பஞ்சாங்கம் (திருக்கணிதம்)
2. அசல் எண் 28, சுத்த வாக்கிய பஞ்சாங்கம். (தஞ்சாவூர்)
3. பாண்டிச்சேரி அட்சயா பஞ்சாங்கம்
4. ஆற்காடு பஞ்சாங்கம் கா.வெ. சீதாராமய்யர்
5. ஆஸ்ட்ரோ மனோன்மணி பஞ்சாங்கம்
6. ஸ்ரீரங்கம் ஆண்டாள் பஞ்சாங்கம்
7. வான மாமலை பஞ்சாங்கம்.
8. குருக்கள் பஞ்சாங்கம்
9. புதுக்கோட்டை பஞ்சாங்கம்
10. சேலம் நம்பெருமாள் பஞ்சாங்கம்
11. காயத்ரி பஞ்சாங்கம்
12. மருத்துவக்குடி பஞ்சாங்கம்
13. வாசன் திருக்கணித பஞ்சாங்கம்.
14. திருமலை திருப்பதி தேவஸ்தானம் வெளியிடும் பஞ்சாங்கம்.
15. திருநெல்வேலி வாக்கிய பஞ்சாங்கம்.
16. ஆனந்த போதினி பஞ்சாங்கம்.
17. ராசி திருக்கணித பஞ்சாங்கம்.
18. கலைமகள் ரெடி பஞ்சாங்கம்.
19. நவீன 108 நெ. திருக்கோயில் அனுஷ்டான வாக்கிய பஞ்சாங்கம்.
20. ஸ்ரீ நிவாஸன் திருக்கணித பஞ்சாங்கம்.
21. ஆற்காடு ஸ்ரீசீதாராமஹனுமான் வாக்ய பஞ்சாங்கம்.
22. குமார விகடன் திருக்கணித பஞ்சாங்கம்.
23. ஸ்ரீஸீதா சமேத ஸ்ரீகோதண்டராமன் ஆலயம் (P.V. களத்தூர்) ஓங்காரம்
24. தமிழ்நாடு பிராமண சங்கம் (கடலூர்) கிளை பஞ்சாங்கம்.

தொகுப்பு :
திருமதி. பத்மாவதி சுப்பராமன்
போன் : 2358635
பாண்டிச்சேரி அட்சயா.

குறிப்பு : மேற்கண்ட பஞ்சாங்கங்களில் உங்களை கவர்ந்த பஞ்சாங்கம் எது என்று கூறமுடியுமா? 50 பைசா கார்டில் எங்களுக்கு தெரியப்படுத்தலாமே !

பஞ்ச ரங்க தலங்கள்.

காவேரி ரங்கன்	-	ஸ்ரீரங்கம்
கஸ்தூரி ரங்கன்	-	திருக்குடந்தை
பரிமள ரங்கன்	-	திருவிந்தளூர்
ஹேமரங்கன்	-	திருநாங்கூர்
கல்யாணரங்கன்	-	திருநகரி.



CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

With best compliments from :

Where quality is by design and excellence, an obsession

M/s. Ganapathy Agencies

33/1, N.S. Road, Marshall House No.827

8th Floor, Calcutta - 700001.

Ph. 033-32911247

Anglo french

Textiles

IS/ISO 9002

AGENT FOR EASTERN, NORTH EASTERN AND BIHAR STATES

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

With Best Compliments From :

V. SELVARAJ

TELECOM

CONSTRUCTION

 # 6, 2nd CROSS STREET,

GANAPATHY NAGAR,

MUTHIALPET,

PUDUCHERRY-605 003.

Ph. 0413-2211355

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

விவாஹப் பொருத்த சந்திரிகை - பாண்டிச்சேரி அட்சயா

ராசி	ஆண் நக்ஷத்ரம் \ பெண் நக்ஷத்ரம்	மேஷம் அஸ்வினி பரணி கிருத் 1-ம் பாத	ரிஷபம் கிருத் 2, 3, 4, பாத ரோகிணி மிருக 1, 2, பாத	மிதுனம் மிருக 3, 4, பாத திருவாதிரை புன 1, 2, 3, பாத	கடகம் புன 4--ம் பாத பூசம் ஆயில்யம்	சிம்மம் மகம் பூரம் உத்ரம் 1-ம் பாத	கன்னி உத்ரம் 2, 3, 4, பாத ஹஸ்தம் சித் 1, 2, பாத	துலாம் சித் 3, 4, பாத சுவாதி விசா 1, 2, 3, பாத	விருச்சிகம் விசா 4-ம் பாத அனுஷம் கேட்டை	தனுசு மூலம் பூராடம் உரா 1-ம் பாத	மகரம் உரா 2, 3, 4 பாத திருவோணம் அவி 1, 2 பாத	கும்பம் அவி 3, 4 பாத சதயம் பூரட் 1, 2, 3, பாத	மீனம் பூரட் 4-ம் பாத உத்திரட்டாதி ரேவதி
மேஷம்	அஸ்வினி பரணி கிருத் 1-ம் பாத	2 1 1 2 4 1 4 2 4	1 2 1 4 1 1 2 1 1	1 2 1 1 1 1 1 2 2	1 2 1 1 1 2 2 2 1	1 1 1 1 4 1 2 1 4	4 4 2 4 2 4 4 2 2	1 1 1 1 1 1 1 1 1	2 2 4 2 2 4 2 2 4	4 1 1 1 4 1 2 2 2	1 4 1 1 1 2 2 1 1	1 2 1 2 1 2 1 4 1	4 4 4 4 3 4 4 4 4
ரிஷபம்	கிருத் 2, 3, 4 பாத ரோகிணி மிருக 1, 2, பாத	4 4 4 2 3 4 1 2 2	2 1 1 2 1 1 1 1 2	1 1 2 1 4 2 2 1 1	2 2 1 2 1 1 1 2 1	2 1 4 1 2 1 1 1 1	4 1 1 1 4 1 1 1 1	2 2 2 2 2 2 1 2 1	1 1 1 1 1 1 1 1 1	4 1 4 4 4 4 2 2 2	3 1 1 2 4 1 1 1 1	1 4 1 1 4 4 1 1 1	1 2 2 4 1 2 1 2 1
மிதுனம்	மிருக 3, 4 பாத திருவாதிரை புன 1, 2, 3, பாத	1 1 2 2 2 1 4 1 2	2 1 2 4 4 2 4 4 2	2 1 1 1 2 1 1 2 2	1 2 1 1 1 2 1 4 1	1 1 1 1 2 1 2 1 1	1 1 1 1 4 1 1 1 1	1 1 1 1 1 1 1 1 4	1 2 2 1 2 4 4 2 2	1 1 1 1 1 1 1 1 1	1 2 1 2 2 2 2 2 4	1 1 1 1 4 1 2 2 4	1 2 1 1 1 4 4 1 2
கடகம்	புன 4- ம் பாத பூசம் ஆயில்யம்	4 1 2 2 3 1 1 2 4	2 1 1 1 2 1 4 2 1	1 4 4 1 4 4 1 2 4	2 2 1 2 1 1 4 2 4	2 1 1 1 3 1 1 1 2	1 1 1 1 2 1 2 1 2	1 1 4 1 1 1 2 1 2	4 1 1 1 2 1 2 1 4	4 3 2 1 4 1 2 2 4	1 2 1 1 2 2 2 1 2	4 4 4 4 4 4 4 4 4	4 1 1 1 4 1 3 1 4
சிம்மம்	மகம் பூரம் உத்தரம் 1ம் பாத	2 1 1 1 3 1 3 1 4	1 3 1 1 1 2 2 1 1	1 1 1 2 1 2 1 4 1	1 1 1 4 4 4 2 2 1	1 1 1 1 2 1 2 1 2	1 1 1 1 1 2 1 1 1	1 1 1 1 1 2 1 1 1	1 1 1 2 1 2 1 1 1	1 1 1 1 4 1 1 1 3	2 1 1 2 4 4 3 2 4	1 1 1 2 1 2 1 1 1	2 1 4 2 2 2 1 2 2
கன்னி	உத்ரம் 2, 3, 4 பாத ஹஸ்தம் சித் 1, 2 பாத	3 3 4 3 3 4 4 4 4	2 1 1 2 4 1 4 1 1	1 4 1 1 4 2 1 1 1	1 1 1 2 2 2 1 4 1	2 1 2 1 1 1 1 4 4	2 1 1 1 1 1 4 2 2	1 1 1 1 1 1 2 1 1	1 1 1 1 1 1 1 1 1	1 1 3 1 1 1 1 1 2	3 1 1 1 4 1 2 1 4	2 2 1 2 4 2 4 2 4	1 1 1 1 1 1 1 1 1
துலாம்	சித் 3, 4, பாத சுவாதி விசா 1, 2, 3 பாத	1 1 1 1 2 1 2 1 1	4 2 2 1 2 1 2 1 2	1 1 1 1 2 1 2 1 4	1 4 1 1 1 1 4 1 1	1 1 4 1 1 1 2 1 2	4 2 4 1 1 1 2 2 4	2 1 1 1 2 1 4 1 1	1 1 1 1 1 1 2 1 1	1 1 2 1 1 1 2 1 2	2 1 4 1 1 1 2 1 2	4 1 1 1 2 1 2 1 4	2 4 2 1 1 1 4 4 2
விருச்சிகம்	விசா 4- ம் பாத அனுஷம் கேட்டை	4 4 4 2 2 2 2 1 4	1 1 1 1 1 1 1 1 1	2 4 4 1 2 1 2 4 4	4 2 1 1 1 1 4 2 4	2 1 2 1 2 1 1 1 4	2 1 4 1 1 1 4 1 2	4 2 4 1 1 1 2 1 4	1 1 1 1 2 1 4 2 4	2 1 2 1 1 1 2 1 2	2 1 2 1 1 1 2 1 2	2 1 4 1 1 1 2 1 2	4 1 1 1 1 1 2 1 2
தனுசு	மூலம் பூராடம் உரா 1-ம் பாத	2 1 1 1 3 1 1 1 1	4 2 2 4 2 2 2 2 2	1 1 1 1 1 1 1 1 1	4 4 3 3 4 4 3 4 4	2 1 1 1 4 1 1 1 4	1 4 1 1 2 4 4 1 1	1 2 1 4 1 2 1 1 1	2 2 4 2 2 4 3 2 2	4 1 1 2 2 1 2 1 2	1 2 1 1 1 2 1 1 1	1 2 1 1 1 2 1 1 2	1 2 1 2 2 2 2 1 1
மகரம்	உரா 2, 3, 4, பாத திருவோணம் அவி 1, 2 பாத	1 1 1 1 3 1 1 1 1	2 1 1 1 4 1 1 1 1	1 2 3 2 4 4 2 2 4	2 2 2 3 1 1 2 3 2	2 4 4 2 4 4 2 4 4	4 1 1 1 4 1 3 1 3	1 1 1 1 1 4 3 1 1	1 1 2 4 1 2 1 2 1	2 1 2 2 4 2 2 4 4	2 1 1 2 1 1 4 2 4	1 1 2 1 4 2 4 1 4	2 1 1 2 1 1 1 1 1
கும்பம்	அவி 3, 4, பாத சதயம் பூரட் 1, 2, 3 பாத	1 1 1 1 2 1 2 1 2	1 1 1 1 2 1 2 1 1	1 1 1 1 4 1 1 1 4	4 4 4 4 2 4 4 4 4	2 4 3 1 2 3 2 2 2	4 2 3 2 4 1 2 2 4	3 2 1 1 2 1 3 1 4	1 2 1 1 1 4 4 1 1	2 1 4 1 1 1 4 2 2	4 4 1 2 4 4 2 4 4	4 1 1 2 4 1 4 2 4	1 2 1 1 1 2 4 1 1
மீனம்	பூரட் 4-ம் பாத உத்திரட்டாதி ரேவதி	1 3 4 1 2 1 1 1 4	2 1 2 2 2 1 2 1 1	1 1 4 1 2 1 1 1 2	4 1 1 1 1 2 2 1 4	2 2 4 2 4 1 1 2 4	1 1 1 1 1 1 1 1 1	4 2 4 2 2 1 4 1 4	4 1 2 1 2 1 2 1 4	4 1 2 1 2 1 1 1 3	2 1 4 1 1 1 3 1 2	4 4 4 1 4 1 4 2 4	4 1 1 1 1 1 4 3 1

எண் : 1. உத்தமம் 2. மத்திமம் 3. அதமம் 4. பொருந்தாது என்பதைக் குறிக்கிறது.

குறிப்பு : நட்சத்திரப் பொருத்தம் (தசவித பொருத்தங்கள்) மட்டும் இந்த அட்டவணைப் பார்த்து சுலபமாக தெரிந்து கொள்ளலாம். மற்றவைக்கு அனுபவம் வாய்ந்த, ராசியான ஜோதிடரை அணுகிப் பயனடையவும். அனுபவம் இல்லாத ராசியில்லாத ஜோதிடரை அணுகி ஏமாறவேண்டாம். - ஆசிரியர்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனம்
23-வது குரு மகா சன்னிதானம்
சீர்வளர்சீர் சிவப்பிரகாச தேசிக
பரமாசாரிய சுவாமிகள் அவர்கள்
திருவாவடுதுறை - 609 803. (நாகை மாவட்டம்)
தொலைபேசி எண் : 04364-232021

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

தேதி : 27.03.2010

நமச்சிவாய வாழ்க நாதன்தாள் வாழ்க
இமைப்பொழுதும் என்நெஞ்சின் நீங்காதான் தாள்வாழ்க
கோகழி ஆண்ட குருமணிதன் தாள்வாழ்க.

அருள் வாழ்த்துரை

நம் தமிழ்ப்பெருங்குடிமக்கள் வான சாஸ்த்திரத்திலும், கணிதத்திலும் வல்லவர்கள். மேனாட்டார்கள் அறிவியல் கருவிகளைக் கொண்டு ஆய்ந்து சொல்லும் வானநூல் செய்திகளை, நம் தமிழ் மக்கள் மெஞ்ஞானத்தால் உணர்ந்து அறிவுத்திறத்தால் ஆய்ந்து தந்ததே **பஞ்சாங்கம்** ஆகும். பஞ்ச அங்கங்களைக் கொண்டது பஞ்சாங்கம்.

பஞ்சாங்கம் நம் வாழ்விற்கு ஒரு வழிகாட்டியாக அமைவது. பஞ்சாங்கத்தின் துணையில்லாமல் எச்செயலும் செய்யமுடியாது. பஞ்சாங்கம் நம் வாழ்வோடு தொடர்புடையது.

விக்ருதி ஆண்டு பஞ்சாங்கத்தை பாண்டிச்சேரி அட்சயா மூலம் திரு. **J. சந்தானம்** வெளியிடுவது பாராட்டிற்குரியது.

விக்ருதி ஆண்டு பஞ்சாங்கம் சிறப்பாக வெளிவர நமது வழிபடு கடவுளாகிய அருள்மிகு ஞானப்பெருங்கூத்தன் திருவடி மலர்களைச் சிந்தித்து வாழ்த்துகிறோம்.

திருவாவடுதுறை ஆதீனம்.

இணைப்பு : திருநீற்றுச்செல்வம்

பெறுநர் : திரு. **J. சந்தானம்** அவர்கள்
40, குயவர் வீதி, முருங்கப்பாக்கம்,
பாண்டிச்சேரி-605 004.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

இனிய
வாழ்த்துகளுடன்..

51 வருடசேவையில்
விவசாயிகளின் கனவு

SUGUNA

சுகுணா



மோட்டார்கள் & பம்பு செட்டுகள்

அங்கீகாரம்
ISO 9001
தரச் சான்றிதழ் பெற்றவை

தரத்திற்கு சுகுணா
சக்திக்கு சுகுணா
ராசிக்கு சுகுணா

4" மற்றும் 6" போர்
சப்மெர்சிபிள்
நீர்மூழ்கி பம்புசெட்டுகள்

மோனோ பிளாக்
கம்ப்ரசர்

தலைமுறைகள் வாழ்த்தும் தரமான **சுகுணா** பம்புசெட்டுகள்

அங்கீகாரம் பெற்ற விற்பனையாளர்

போன் : 224679,
செல் : 94433-22971

ஸ்ரீ கனகதுர்கா எலக்ட்ரிக்கல்ஸ்

52/B2 சென்னை ரோடு, (L.I.C) ஆபீஸ் அருகில்) கள்ளக்குறிச்சி -606202.

கிளை:
T.V.மலை மெயின் ரோடு, சங்கராபுரம், Ph. 224679

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

சந்திராஷ்டம அட்டவணை

(எல்லா நட்சத்திரகாரர்கட்கும்)

சந்திராடஷ்டம காலங்களில், சுபகாரியங்களும், புதுமுயற்சியும், செய்யக்கூடாது, எனவே விக்ருதி வருஷத்தில், ஒவ்வொருவருக்கும் எந்த மாதத்தில் எந்த தேதியில் சந்திராஷ்டமம் 2அல்லது 3நாட்கள் வரும் என்பதை கீழ்கண்ட அட்டவணையில் நட்சத்திரத்தின் வாயிலாக அறிந்துகொள்க :-

நட்சத்திரம்	சித்தி	வைகா	ஆனி	ஆடி	ஆவணி	புரட்டாசி	ஐப்பசி	கார்த்திகை	மார்கழி	தை	மாசி	பங்குனி
அசுவினி	17	13,14	9,10	5	1,28,29	24,25	21	18,19	16,17	14	12,13	9,10
பரணி	18	14,15	10,11	6	2,3,29,30	25,26	22	19,20	17,18	15	13,14	10,11
கிருத்திகை	19	15,16	11,12	7	3,4,30,31	26,27	23	20,21	18,19	16	14,15	11,12
ரோகினி	20	16,17	12,13	8	4,5,31	28	24,25	21,22	19,20	17	15,16	12,13
மிருகசீர்	21	17,18	13,14	9	5,6	1,2,29	25,26	22,23	20,21	18	16,17	13,14
திருவாதிரை	22,23	18,19	14,15	10	6,7	2,3,30	26,27	23,24	22	19,20	17,18	14,15
புனர்பூசம்	23,24	19,20	16	11,12	7,8	3,4,31	27,28	24,25	23	20,21	18,19	16
பூசம்	24,25	20,21	17	12,13	8,9	5	1,2,28,29	25,26	24	21,22	19,20	17
ஆயில்யம்	25,26	21,22	18	13,14	9,10	6	2,3,29,30	27	25,26	22,23	20,21	18
மகம்	26,26	23	19,20	14,15	10,11	7	3,4,30	1,28	26,27	23,24	22	19,20
பூரம்	27,28	24	20,21	15,16	12	8	4,5	1,2,29	27,28	24,25	23	20,21
உத்திரம்	1,2,28,29	25	21,22	16,17	13	9,10	5,6	3	1,2,28,29	25,26	24	21,22
ஹஸ்தம்	2,3,29,30	26	22,23	17,18	14	10,11	6,7	4	2,3,29,30	26,27	25,26	22,23
சித்திரை	3,4,30,31	27	23,24	18,19	15	11,12	7,8	5	3,4,30	1,28	26,27	23,24
சுவாதி	4,5,31	28	24,25	19,20	16	12,13	8,9	6	4,5	1,2,29	27,28	24,25
விசாகம்	5,6	1,2,29	25,26	20,21	17	13,14	9,10	7	5,6	2,3	1,28,29	25,26
அனுஷம்	6,7	2,3,30	26,27	21,22	18	14,15	10,11	8	6,7	3,4	2,29,30	26,27
கேட்டை	7,8	3,4,31	27,28	22,23	19	15,16	11,12	9	7,8	4,5	3,30	1,27,28
மூலம்	8,9	4,5	1,28,29	23,24	20	16,17	13,14	10	8,9	5,6	4	1,2,28,29
பூராடம்	9	5,6	2,29,30	24,25	21	17,18	13,14	11	9,10	6,7	5	2,3,29,30
உத்திராடம்	10	6,7	3,30,31	25,26	22	18	14,15	12	10	7,8	5,6	3,30
திருஓணம்	11	7,8	3,4,31	26,27	22,23	19	15,16	12,13	11	8,9	6,7	4
அவிட்டம்	12	8,9	4,5,32	27,28	23,24	20	16,17	13,14	12	9,10	7,8	5
சதயம்	13	9,10	5,6	1,28,29	24,25	21	17,18	14,15	13	10,11	8,9	6
பூரட்டாதி	14	10,11	6,7	2,29,30	25,26	22	18,19	15,16	14	11,12	9,10	7
உத்திரட்டாதி	15	11,12	7,8	3,30,31	26,27	23	19	16,17	15	12	10,11	8
ரேவதி	16	12,13	8,9	4,31	27,28	24	20	17,18	16	13	11,12	8,9

தொகுப்பு: பரம்பரை சோதிடர் அருள் கருணாகரன்
ஸ்ரீ பாலமுருக ஜோதிட நிலையம், செல் : 94422 36501

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

விவாகப் பொருத்தங்கள்

தினம், கணம், மாஹேந்திரம், ஸ்திரீ தீர்க்கம், யோனி, ராசி, ராசியதிபதி, வசியம், ரஜ்ஜு, வேதை என பொருத்தங்கள் பத்து விதமாகும்.

தினப்பொருத்தம் : பெண் நக்ஷத்திரம் முதல் ஆண் நக்ஷத்திரம் வரை எண்ணிக் கண்ட தொகையை, 9-ஆல் வகுத்து, மீதி வரும் தொகை 2-4-6-8-9-11-13-15-17-18-20-24-26 எனில் தினப் பொருத்தம் உண்டு.

ஏக நக்ஷத்திரப் பொருத்தம் : ஸ்திரீ, புருஷ நக்ஷத்திரங்கள் ஒன்றாக இருப்பதில் ரோகிணி, திருவாதிரை, மகம், விசாகம், பூசம், திருவோணம், ரேவதி, உத்திரட்டாதி இவை எட்டும் உத்தமம்.

அசுவினி, கார்த்திகை, மிருகசீர்ஷம், பூரம், உத்திரம், புனர்பூசம், பூராடம், உத்திராடம், அனுஷம், கேட்டை, ஹஸ்தம் இவை 11 ம் மத்யமம்.

பூரட்டாதி, ஆயில்யம், சித்திரை, அவிட்டம், சதயம், சுவாதி, மூலம், பரணி-இவைகள் கூடாது.

புருஷ நக்ஷத்திரம் ஸ்த்ரீ நக்ஷத்திரத்திற்கு 27-வதானால், இரு நக்ஷத்திரங்களும் ஒரே ராசியாய் இருந்தால் பொருத்தம் உண்டு.

இருவர் நக்ஷத்திரங்களும், ஒரு ராசியில் வருவதில் பரணி கார்த்திகையும், அவிட்டம் சதயமும், பூசம், ஆயில்யமும் கூடாது.

வதவைநாசிக நக்ஷத்திரம் : ஸ்திரீ, புருஷ நக்ஷத்திரங்கள் ஒன்றுக்கொன்று 7-வதாகவும் 22-வதாகவும் இருப்பது வதவைநாசிகம் எனப்படும். இப்படி வரும் நக்ஷத்திரங்களை சேர்க்கக் கூடாது.

கணப்பொருத்தம் : அசுவினி, மிருகசீரிஷம், புனர்பூசம், பூசம், ஹஸ்தம், ஸ்வாதி அனுஷம், திருவோணம், ரேவதி இவைகள் தேவ கணம்.

பரணி, ரோகிணி, திருவாதிரை, பூரம், உத்ரம், பூராடம், உத்ராடம், பூரட்டாதி, உத்திரட்டாதி இவைகள் மனுஷ்ய கணம்.

கார்த்திகை, ஆயில்யம், மகம், சித்திரை, விசாகம், கேட்டை, மூலம், அவிட்டம், சதயம் இவைகள் ராக்ஷஸ கணம்.

பெண்	-	ஆண்	பொருத்தம்
தேவ	-	தேவ	உண்டு
ராக்ஷஸ	-	ராக்ஷஸ	உண்டு
தேவ	-	மனுஷ்ய	மத்திமம்
தேவ	-	ராக்ஷஸ	மத்திமம்
ராக்ஷஸ	-	ராக்ஷஸ	ஸ்த்ரீ நக்ஷத்திரம் 14க்கு மேலிருந்தால் பொருத்தம் உண்டு
மனுஷ்ய	-	ராக்ஷஸ	
ராக்ஷஸ	-	மனுஷ்ய	
ராக்ஷஸ	-	தேவ	

மாஹேந்திரப் பொருத்தம் : ஸ்த்ரீ நக்ஷத்திரம் முதல் புருஷ நக்ஷத்திரம் வரை எண்ண, 4-7-10-13-16-19-22-25 ஆக வரின், மாஹேந்திரப் பொருத்தம் உண்டு.

ஸ்த்ரீ தீர்க்கப் பொருத்தம் : ஸ்த்ரீ நக்ஷத்திரம் முதலாக புருஷ நக்ஷத்திரம் வரை எண்ண, 13-க்கு மேலிருந்தால் உத்தமம். 7-க்கு மேலிருந்தால் மத்யமம்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

யோனிப் பொருத்தம் :

நக்ஷத்திரம்	யோனி	சத்ரு	யோனி	நக்ஷத்திரம்
அசுவினி, சதயம்	குதிரை	-	எருமை	ஹஸ்தம், சுவாதி
பரணி, ரேவதி	யானை	-	சிம்மம்	அவிட்டம், பூரட்டாதி
கார்த்திகை, பூசம்	ஆடு	-	குரங்கு	பூராடம், திருவோணம்
ரோகிணி, மிருகசீர்ஷம்	சாப்பம்	-	கீரி	உத்ராடம்
திருவாதிரை, மூலம்	நாய்	-	மான்	அனுஷம், கேட்டை
புனர்பூசம், ஆயில்யம்	பூனை	-	எலி	மகம், பூரம்
உத்திரம், உத்திரட்டாதி	பசு	-	புலி	சித்திரை, விசாகம்

மேலே குறிப்பிட்டுள்ளவை, பொருந்தாத சத்ரு (பகை) யோனிகள்.

ஸ்திரீ, புருஷ நக்ஷத்திரங்கள் ஒரே யோனியாய் இருப்பது உத்தமம்.

வெவ்வேறு யோனியாய் இருப்பது மத்திமம், சத்ரு யோனியாய் இருப்பது அதமம்.

ராசிப் பொருத்தம் பெண் ராசி முதல் ஆண் ராசி வரை எண்ணிக் கண்ட தொகை 1,3,4,5,7,9,11 என வந்தால் ராசிப் பொருத்தம் உண்டு. ராசி 6-8 எனவும் 2-12 எனவும் வந்தால், அதனை சஷ்டாஷ்டகம், துவிர்துவாதசம் என்றும் கூறுவர்.

சுப சஷ்டாஷ்கம்

மேஷம் - கன்னி	துலாம் - மீனம்
மிதுனம் - விருச்சிகம்	தனுசு - ரிஷபம்
சிம்மம் - மகரம்	கும்பம் - கடகம்

சுப துவிர்துவாதசம்

ரிஷபம் - மிதுனம்	கன்னி - துலாம்
கடகம் - சிம்மம்	விருச்சிகம் - தனுசு
சிம்மம் - கன்னி	மீனம் - மேஷம்
	மகரம் - கும்பம்

ராசியதிபதி பொருத்தம் : பெண் புருஷ ராசியதிபதிகள் மித்திரர்களானாலும், சமமானாலும் உத்தமம், சத்ரு, மித்திரர்களானால் மத்யமம், சம சத்ருக்களானாலும், சத்ருக்களானாலும் பொருத்தம் இல்லை.

கிரஹங்களின் சத்ரு, மித்ரு, சம அட்டவணை :

விவரம்	சூரியன்	சந்திரன்	அங்காரகன்	புதன்	குரு	சுக்கிரன்	சனி	ரா-கே
சூரியன்	-	நட்பு	நட்பு	சமம்	நட்பு	பகை	பகை	பகை
சந்திரனுக்கு	நட்பு	-	சமம்	நட்பு	சமம்	சமம்	சமம்	பகை
செவ்வாய்க்கு	நட்பு	நட்பு	-	பகை	நட்பு	பகை	சமம்	பகை
புதனுக்கு	நட்பு	பகை	சமம்	-	சமம்	நட்பு	சமம்	சமம்
குருவுக்கு	நட்பு	நட்பு	நட்பு	பகை	-	பகை	சமம்	சமம்
சுக்கிரனுக்கு	பகை	சமம்	சமம்	நட்பு	சமம்	-	நட்பு	நட்பு
சனிக்கு	பகை	பகை	பகை	நட்பு	சமம்	நட்பு	-	நட்பு
ராகு,கேதுவிற்கு	பகை	பகை	பகை	சமம்	சமம்	நட்பு	நட்பு	-

குறிப்பு : பெண், புருஷ ராசியதிபதிகள் ஒருவரே என்றாலும், மித்திரர் ஆனாலும் பெண், புருஷ ராசிகள் ஒன்றுக்கொன்று 7ம் ராசி (சம சப்தமம்) ஆனாலும் ரஜ்ஜு, வேதை, கணம், ராசிப் பொருத்தங்கள் இல்லாவிட்டாலும் விவாகம் செய்யலாம். எனினும் கும்ப - சிம்ம, கடக-மகர சமசப்தங்கள் ஆகாது.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

வசியப் பொருத்தம் :

மேஷத்திற்கு	-	சிம்மம், விருச்சிகம்
ரிஷபத்திற்கு	-	கடகம், துலாம்
மிதுனத்திற்கு	-	கன்னி
கடகத்திற்கு	-	விருச்சிகம், தனுசு.
சிம்மத்திற்கு	-	துலாமும், மீனமும்
கன்னிக்கு	-	மிதுனம், மீனமும்.
துலாத்திற்கு	-	மகரம்
விருச்சிகத்திற்கு	-	கன்னி, கடகம்
தனுசுக்கு	-	மீனம்
மகரத்திற்கு	-	கும்பம், மேஷம்
கும்பத்திற்கு	-	மேஷம்
மீனத்திற்கு	-	மகரம்
		வசியமாகும்

பெண் ராசிக்கு புருஷ ராசி வசியமாயின் உத்தமம், புருஷ ராசிக்கு பெண்ராசி வசியமானால் மத்திமம். இப்படி இல்லை என்றால் வசியப் பொருத்தம் இல்லை.

ரஜ்ஜுப் பொருத்தம் மிகவும் முக்கியமான பொருத்தம் :

வெவ்வேறு குறுக்கு வரிகளில் பெண் புருஷ நக்ஷத்திரங்கள் வந்தால் ரஜ்ஜுப் பொருத்தம் உண்டு. ஒரே வரியில் வரும்போது

நட்சத்திரம்	ரஜ்ஜு	பலன்
மிருகசீரிஷம்-சித்திரை-அவிட்டம் எனில்	சிரோ	புருஷ நாசம்
ரோகிணி - ஹஸ்தம்-திருவோ-திருவாதி-சுவாதி-சதயம் எனில்	கண்ட	ஸ்திரீ மரணம்
கார்த்திகை-உத்ரம்-உத்ராடம்-விசாகம்-புனர்வசு-பூரட்டாதி எனில்	நாபி/உதரம்	புத்ரதோஷம்
பரணி-பூரம்-பூராடம்-அனுஷம்-பூசம்-உத்திரட்டாதி எனில்	ஊரு	பணகஷ்டம்
அஸ்வினி-மகம்-மூலம்-ஆயில்யம்-கேட்டை-ரேவதி எனில்	பாத	பிரயாணத்தில் தீமை

வேதைப் பொருத்தம் : ஆண் பெண் நக்ஷத்திரத்தில் :

அஸ்வினி - கேட்டை,	பரணி - அனுஷம்	கிருத்திகை - விசாகம்
ரோகிணி - சுவாதி	திருவாதிரை-திருவோணம்	புனர்பூசம் - உத்திராடம்
பூசம் - பூராடம்	ஆயில்யம் - மூலம்	மகம் - ரேவதி
பூரம் - உத்திரட்டாதி	உத்திரம் - பூரட்டாதி	ஹஸ்தம் - சதயம்

இவை ஒன்றுக்கொன்று வேதையாகும். தவிர மிருகசீர்ஷம் - சித்திரை - அவிட்டம் இம்மூன்று நக்ஷத்திரங்களும் ஒன்றுக்கொன்று வேதையாகும். பெண் புருஷ நக்ஷத்திரங்கள் வேதையானால் வேதைப் பொருத்தம் இல்லை. மேற்கண்ட பொருத்தங்களைத் தவிர ஜாதக ரீதிப் பொருத்தமும் அவசியம்.

விடியற் காலையில் எழுந்ததும் ஜெபிக்க வேண்டியது.

கார்கோடகஸ்ய நாகஸ்ய தமயந்த்யா நளஸ்யச
ருதுபர்ணஸ்ய ராஜர்ஷே : கீர்த்தணம் கலி நாபீணம் !

....

விச்வேசம் மாதவம் டுண்டிம் தண்டபாணிஞ்ச பைரவம்
வந்தே காசீம் குஹாம் கங்காம் பவாநீம் மணிகர்ணிகாம்

– இதை தினமும் ஜபித்தால் காசிக்குப் போகும்படியான பாக்யம் கிட்டும்.

S. ரமேஷ், லாஸ்பேட்டை.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

விருட்சப் பொருத்தம் (மலட்டுத் தன்மை இல்லாதது)

விருட்சம் என்ற சொல்லுக்கு, மரம் என்பது பொருளாகும். 27 நட்சத்திரங்களுக்கும் பால் உள்ள மரம், பாலில்லாத (வைரம்பாய்ந்தமரம்) மரம் என்கின்ற இரண்டு வகையில்

நட்சத்திரம்	மரம்				
அஸ்வினி	எட்டி	மகம்	ஆல் (பால்)	மூலம்	மரா (பால்)
பரணி	நெல்லி	பூரம்	பூர்ச மரம்	பூராடம்	வஞ்சி (பால்)
கிருத்திகை	அத்தி (பால்)	உத்திரம்	அலரி (பால்)	உத்திராடம்	பலா (பால்)
ரோகிணி	நாவல் (பால்)	அஸ்தம்	அத்தி (பால்)	திருஓணம்	எருக்கு (பால்)
மிருகசீரிஷம்	கருங்காலி	சித்திரை	வில்வம்	அவிட்டம்	வன்னி
திருவாதிரை	செங்காலி	சுவாதி	மருதம்	சதயம்	கடம்பு
புனர்பூசம்	மூங்கில்	விசாகம்	விளா மரம்	பூரட்டாதி	தேமா
பூசம்	அரசு (பால்)	அனுஷம்	மகிழம்	உத்திரட்டாதி	வேம்பு (பால்)
ஆயில்யம்	புன்னை (பால்)	கேட்டை	பராய் (பால்)	ரேவதி	இலுப்பை (பால்)

ஆணுக்கு வைரமும், பெண்ணுக்கு பாலுள்ள மரமும், இருந்தால் குறைந்த அளவு குழந்தை இருக்கும். இருவருக்கும் பாலுள்ள மரம் இருந்தால் உத்தமம், பெண் பாலில்லா மரமாக இருந்தால், பெண் மலடு ஆண் பாலில்லா மரமாக இருந்தால் ஆண் மலடு என்று அறிய வேண்டும், இருப்பினும் அவரவர் கிரக நிலை நன்றாக இருந்தால் மேலே சொன்ன கருத்து பொருந்தாது. - அருள். கருணாகரன், பரம்பரை ஜோதிடர், புதுவை-8. செல் : 94422 36501

கன்னிமார் துணை

N. நாகராஜன் ஐயர் புரோகிதர்

பூஜ்யாய ராகவேந்திராய ஸத்யதர்ம ரதாயச
பஜதாம் கல்ப வ்ருக்ஷாய நமதாம் காமதேனவே.

ஹோமம்/சுபகாரியங்கள் செய்ய

அனைத்து பிரிவினருக்கும்

கணபதி ஹோமம், நவகிரஹ ஹோமம், சுதர்ன ஹோமம், ஆயுஷ்ய ஹோமம், வாஸ்து ஹோமம், கிருஹப்பிரவேசம், திருமணம் நிச்சயதாம்பூலம், ஆகிய அனைத்து சுபகாரியங்களை மிகச் சிறப்பாக செய்து கொடுக்கப்படும்.

குறிப்பு: காசி, அலஹாபாத் (திரிவேணி சங்கமம்), கயா ஆகிய ஸ்தலங்களில் வைதீக முறைப்படி ஸ்ரார்த்தங்கள் ஏற்பாடு செய்து தரப்படும்.

வீட்டு விலாசம் :
N. நாகராஜன் ஐயர் (புரோகிதர்)
எண்.2/1448 லஷ்மி, 2-வது தெரு
மடிப்பாக்கம், சென்னை-91.

மடிப்பாக்கம் கோடிபாபா கோவில் அருகில்
போன் : 044/22583386
செல் : 98411 46465

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

பாப சாம்யம் :

ஆண், பெண் இருவரின் ஜாதகத்தை வைத்து பொருத்தம் பார்க்கும்போது, அசுப ஸ்தானத்தில் தீய கிரகங்களின் நிலையை அறிந்து இருவர் ஜாதகத்தையும் பார்த்து 7, 8ம் இடம், சந்திரன், சுக்கிரன் இவர்களின் நிலையைக் கண்டு அதற்கு ஏற்றவாறு சமநிலையிலுள்ள ஜாதகத்தை தேர்ந்தெடுப்பது பாபசாம்யம் எனப்படும்.

ஆண், பெண் இருவர் பிறந்த நட்சத்திரம் கார்த்திகை, அவிட்டம், சதையம், பூசம், ஆயில்யமானால் அனுகூலமல்ல என்பதை காலவிதானம் என்கின்ற சோதிட நுல் கூறுகின்றது.

"ஏகராசௌ த்விநஷத்ரெ க்ருத்திகாயாம் - தாரசெ
தனிஷ்டா சத்தாராச பூஷயாஸ் லேஷா விவர் - ஜிதா"

தசா சந்தி :

ஆண், பெண் இருவரின் ஜாதகத்தை வைத்து பொருத்தம் பார்க்கும் போது, அவர்களுக்கு நடக்கும், தசை ஏகதசையாக இருந்து, அது ஒருவருடத்திற்குள் சந்தித்திருக்கக் கூடாது, அப்படி சந்திக்குமேயானால் அது சந்தி எனப்படும், இதை ஒதுக்க வேண்டும்.

நாடிப் பொருத்தம் (கண்டம் இல்லாதது) :

தம்பதியர்கள் இருவரில் ஒருவருக்குக்கூட எந்த இன்னல்களும் இல்லாமல் பார்ப்பது ஆகும், அணுக்கும் பெண்ணுக்கும் ஒரே நாடி இருந்தால் நாடிப்பொருத்தம் இல்லை, வேறுவேறு நாடியில் இருந்தால் நாடிப்பொருத்தம் உண்டு (27 நட்சத்திரங்களை மூன்று நாடியாக பகுத்து பார்ப்பதாகும்.

வலது நாடி (பார்சுவ நாடி)	மத்தியநாடி (மத்தியம நாடி)	இடதுநாடி (சமான நாடி)
அசுவினி	பரணி	கிருத்திகை
திருவாதிரை	மிருகசீரிஷம்	ரோகிணி
புனர்பூசம்	பூசம்	ஆயில்யம்
உத்திரம்	பூரம்	மகம்
ஹஸ்தம்	சித்திரை	சுவாதி
கேட்டை	அனுஷம்	விசாகம்
மூலம்	பூராடம்	உத்திராடம்
சதயம்	அவிட்டம்	திருஓணம்
பூரட்டாதி	உத்திரட்டாதி	ரேவதி

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

சஷ்டாஷ்டகம் தோஷம் :

பெண்ணின் இராசியிலிருந்து ஆணின் இராசியை எண்ணும்போது எண்ணிக்கை 6ம், ஆணின் இராசியிலிருந்து பெண்ணின் இராசியை எண்ணும்போது 8ம் வந்தால் சஷ்டாஷ்டக தோஷம் ஆகும். சஷ்டாஷ்டக தோஷம் தம்பதியர்களை சண்டை சச்சரவில் ஈடுபடுத்தி பிரிவினையை ஏற்படுத்தும், இந்த சஷ்டாஷ்டக அமைப்பில் அனுகூல சஷ்டாஷ்டகம்; பிரதி கூல சஷ்டாஷ்டகம் என இரு பிரிவுகள் உண்டு. இதில் அனுகூல சஷ்டாஷ்டகம் தீமையைத் தராது, பிரதிகூல சஷ்டாஷ்டகம் தீமையை செய்யும்.

அனுகூல சஷ்டாஷ்டகம் :

பெண் இராசி	ஆண் இராசி
மேஷம்	கன்னி
தனுசு	ரிஷபம்
துலாம்	மீனம்
கும்பம்	கடகம்
சிம்மம்	மகரம்
மிதுனம்	விருச்சிகம்

பிரதி கூல சஷ்டாஷ்டகம் :

பெண்இராசி	ஆண்இராசி
ரிஷபம்	துலாம்
கடகம்	தனுசு
கன்னி	கும்பம்
விருச்சிகம்	மேஷம்
மகரம்	மிதுனம்
மீனம்	சிம்மம்

த்வித்வாதச தோஷம்

பெண் இராசியிலிருந்து ஆண் இராசியை எண்ணும்போது 12வது வரும் இராசியும், ஆணின் இராசியிலிருந்து பெண்ணின் இராசியை எண்ணும்போது 2வது வரும் இராசியும் த்வித்வாதச தோஷத்தை தரும், அதாவது குடும்பமும், விரயமும் என்கின்ற நிலையில் சொல்வதாகும். இத்தோஷம் இருந்தால் குடும்ப ஒற்றுமை சீர்குலையும், பிரிவினை ஏற்படும். இதில் சில பெண் இராசிகளுக்கு த்வித்வாதச தோஷம் விதி விலக்காகும்

த்வித்வாதச தோஷம் இல்லாத இராசிகள் :

பெண் இராசி : ரிஷபம், கடகம், கன்னி, விருச்சிகம், மகரம், மீனம்.

ஆண் இராசி : மேஷம், மிதுனம், சிம்மம், துலாம், தனுசு, கும்பம்.

த்ரி ஜேஷ்டை:

ஆனிமாதத்தில் பிறந்த ஆணுக்கும், ஆனி மாதத்தில் பிறந்த பெண்ணுக்கும், ஆனிமாதத்தில் திருமணம் செய்யக்கூடாது, திருமணம் செய்தால் குழந்தை இருக்காது, குடும்ப வாழ்க்கை பாதிக்கப்படும், அமைதி இருக்காது. எந்த பரிகாரமும் இல்லை.

பகவானின் 10 அவதாரங்கள் (தசாவதாரங்கள்) : 1. மத்ஸ்யாவதாரம் (மீன்) 2. கூர்மாவதாரம், 3. வராஹவதாரம், 4. நரஸிம்மாவதாரம், 5. வாமனாவதாரம், 6. பரசுராம அவதாரம், 7. ராமாவதாரம், 8. பலராம அவதாரம், 9. கிருஷ்ணாவதாரம் 10. கல்கி அவதாரம்.

ஓம்கார நகரஸ்த்வந்தம் நிகமாந்தம் வனேஸ்வரம்
நித்யமேவம் சிவம்சாந்தம் வந்தே குஹம் உமாஸுதம்

வாசாமகோசரம் ஸ்கந்தம் சிந்துத்யான விஹாரினீம்
குருமூர்த்திம் மகேசானம் வந்தே குஹம் உமாஸுதம்

சச்சிதானந்தரூபேணம் சம்சாரத்வாந்த தீபதும்
சுப்ரஹ்மண்யம் மனாத்யந்தம் வந்தே குஹம் உமாஸுதம்

ஸ்வாமி நாதம் தயாசிந்தம் பவாஸிதே தாரகம் பிரபும்
நிஷ்களங்கம் குணா தீதம் வந்தே குஹம் உமாஸுதம்.

நிராகாரம் நிராதாரம் நிர்விகாரம் நிராமயம்
நித்வம் த்வம்ஸ நிராலம்பம் வந்தே குஹம் உமாஸுதம்

(மஹான் முத்துசாமி தீட்சிதர் ஸ்லோகம்)

தொகுப்பு K.O. லக்ஷ்மி,
பெங்களூர்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

வருஷ தேவதை: இந்திரன் வருவதால் மிக நல்ல பலனும் பெண்களுக்கு நல்அதிஷ்டமும் பல்வேறு ஆலயங்களில் குடமுழுக்கு நிகழ்ச்சிகளும் விலைவாசி வீழ்ச்சியும் அதிக மழையால் இவ்வாண்டு பூச்சி தொல்லையும் நீங்கும்.

ஷண்மண்டல பலன்: தெய்வபக்தி அதிகமாகும் மக்கள் சுகமடைவர்

தைப்பூசம் பலன்: சனிக்கிழமை வருவது சிறப்பு ஆந்திராவில் வெப்பம், கர்நாடகத்தில் பணியும் தமிழகத்தில் நல்ல மழையும் பொழியும் செங்கல் மணல் விலை உயரும்.

அஷ்ட பைரவர்கள்

1. அசிதாங்க பைரவர், 2. குருபைரவர், 3. சண்டபைரவர், 4. குரோத பைரவர்
5. உன்மத்த பைரவர், 6. கபாலி பைரவர், 7. பீஷ்ண பைரவர், 8. சம்ஹார பைரவர்

செவ்வாய் - வெள்ளிக் கிழமைகளில் அபிஷேகம் செய்வது மிகவும் விசேஷம்.

விக்ருதி வருஷ விசுவாயன பலன்கள் (தான்யாதிகள்)

வருஷம் 5 தான்யம் 17 சீதம் 15 தாபம் 15 உஷ்ணம் 11 மாருதம் 13 பிரஜாவிருத்தி 15 பிரஜாக்ஷயம் 15 ராஜவிட்டூரம்11 உக்கிரம் 5 புண்ணியம் 5 பாபம்5 வியாதி 3 வியாதிசாந்தி 15 ஆசாரம் 13 அனாசாரம் 13 ஜனனம் 9 மரணம்11 தேக உபத்திரவம் 13 தேக சுகம் 13 சோரபயம் 9 சோர நாசம் 3 அக்னி பயம்3 அக்னி சாந்தி 3 மிருக நாசம்7 அதிவிருஷ்டி11 அநாவிருஷ்டி 11 எலி 7 விட்டில்9 கிளி 11 தற்கொலை 11 பிறர்கொலை 7 தங்கம் 2 வெள்ளி 14 தாமிரம் 12 வெண்கலம் 12 உலுக்கு 8 இரும்பு 10 பித்தளை 12 ஈயம் 12 ரசம்8 மாணிக்கம்7 வஜ்ரம் 11 வைடூரியம் 15 மரகதம் 15 நீலம் 11 கோமேதகம் 11 புஷ்பராகம்15 முத்து 15 பவளம் 11 பசி 11 தாகம் 15 நித்திரை 3 சோம்பல் 13 உத்யோகம் 5 சாந்தம் 15 குரோதம் 13 டம்பம் 5 மித்ருத்வம் 3 பேதம் 15 நைஷ்டிகம் 7 சிவாபாதம் 7 துஷ்ட நிக்ரஹம் 7 சிஷ்ட பரிபாலனம் 11 பிராணி சுகம் 11 பிராணி துக்கம் 7 மகோத்பாதம் 11 மின்னல் 2மேக கர்ஜனை 9 கல்மழை 5 இடி 4 பூகம்பம் 9 சுனாமி 7 ரச நிஷ்பத்தி 9 பல நிஷ்பத்தி 13 உற்சாகம் 11 மிருகபாதை 3

யோகினி நிற்கும் திசை

பூர்வபக்ஷம்	கிருஷ்ணபக்ஷம்	
பிரதமை - ஏகாதசி	சஷ்டி	கிழக்கு
துவிதியை - துவாதசி	சப்தமி	வடக்கு
திருதியை - திரயோதசி	அஷ்டமி	தென்கிழக்கு
சதுர்த்தி - சதுர்தசி	நவமி	தென்மேற்கு
பஞ்சமி	தசமி	தெற்கு
சஷ்டி	பிரதமை ஏகாதசி	மேற்கு
சப்தமி	துதியை துவாதசி	வடமேற்கு
அஷ்டமி	திருதியை திரயோதசி	வடகிழக்கு
நவமி	சதுர்த்தி சதுர்தசி	ஆகாயம்
தசமி	பஞ்சமி, அமாவாசை	பூமி

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

நல்ல காரியங்கள் செய்யும்போது கவனிக்க வேண்டியது

ராகு காலம், எமகண்டம் இல்லாத நேரம் பார்த்து செய்ய வேண்டும் என்பது நம் அனைவருக்கும் தெரியும். ராகு காலம் எளிதில் கண்டு பிடிக்க : திருநாள் சந்தையில் வெய்யிலில் புறப்பட்டு விளையாட செல்வது ஞாயமா? இந்த வரியை நினைவில் வைத்துக் கொள்ளவும். அடிக்கோடிட்ட எழுத்துக்கள் நாளின் முதல் எழுத்தைக் குறிக்கும். தி-திங்கள், ச-சனி, வெ-வெள்ளி, பு-புதன், வி-வியாழன், செ-செவ்வாய், ஞா-ஞாயிற்றுக்கிழமையையும் குறிக்கும், திங்-ராகு காலம் காலை 7.30-9.00, சனி-ராகு காலம் காலை 9.00 - 10.30, வெள்ளி-ராகு காலம் 10.30-12.00. புதன்-ராகு காலம்-12.00-1.30. வியா-ராகு காலம் 1.30-3.00. செவ்-ராகு காலம் 3.00 - 4.30. ஞாயி-ராகு காலம் 4.30-6.00. முதல் நாள் ராகு காலத்துடன் 1.30 மணி நேரம் கூட்ட மற்ற நாட்களின் ராகு காலம் கண்டு பிடிப்பது எளிது !

எமகண்டம் எளிதில் கண்டு பிடிக்க : லக்ஷ்மியை வழிபட ஏற்ற நாள் வெள்ளிக்கிழமை. அன்றைய தினம் 3.00-4.30 எமகண்டம். இதை ஆரம்பமாகக் கொண்டு முறையே, அடுத்து வரும் கிழமைகளில், வரிசையாக 1.30 மணி நேரம் குறைத்துக் கொண்டே வந்தால், அன்றைய தினத்து எமகண்டம் தெரியும்.

திங்கள்	- 10.30-12.00 (காலை)	வெள்ளி	- 03.00-04.30 (மதியம்)
செவ்	- 09.00-10.30 (காலை)	சனி	- 01.30-03.00 (மதியம்)
புதன்	- 07.30-09.00 (காலை)	ஞாயிறு	- 12.00-01.30 (மதியம்)
வியா	- 06.00-07.30 (காலை)		

இதை நினைவில் வைத்துக் கொண்டு, எமகண்டத்தைத் தவிர்த்து, சுப வேளையில் காரியங்களைத் தொடங்கி நல்ல பலன்களை அடையுங்கள். சுபம் !

இராகுகாலம் - எமகண்டம் முதலியன

வாரம்	ராகு காலம்	எமகண்டம்	குளிகை	வாரசூலை	பரிகாரம்
ஞாயிறு	4½-6	12-1½	3-4½	மேற்கு	வெல்லம்
திங்கள்	7½-9	10½-12	1½-3	கிழக்கு	தயிர்
செவ்வாய்	3-4½	9-10½	12-1½	வடக்கு	பால்
புதன்	12-1½	7½-9	10½-12	வடக்கு	பால்
வியாழன்	1½-3	6-7½	9-10½	தெற்கு	தைலம்
வெள்ளி	10½-12	3-4½	7½-9	மேற்கு	வெல்லம்
சனி	9-10½	1½-3	6-7½	கிழக்கு	தயிர்

இராகு காலத்திலும், எமகண்டத்திலும், சுப காரியங்களை செய்யக் கூடாது. குளிகை காலத்தில் அசுப காரியங்களை செய்யக் கூடாது.

கனகதாரா ஸ்லோகம்

விஸ்வாமரேந்த்ர பதவிப்ரமதானதக்ஷம்
ஆனந்தஹேதுரதிகம் முரவித்விஷோபி !
ஈஷந்நிஷீதது மயி க்ஷணமீக்ஷணார்த்தம்
இந்தீவரோதரஸஹோதரா; மிந்திராயா:
(உத்தியோக லாபத்தை தரும்)

- குமாரி
மானசா பிரசன்னா,
லண்டன்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ஓம்



அன்பொடுஉன் நாமம்கேள் அன்பர்தம் அன்பருக்கு
அன்பன் ஆயிடஅருள் அருணாசலா! - 104

புதுவை ரமண கேந்திரம்

35-A, காமராஜர் சாலை
தட்டாஞ்சாவடி, புதுச்சேரி - 9.
பேசி : 0413 - 2272141

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

With Best Compliments From :-

SRI MAHALAKSHMI NURSING HOME

T.T.K. Health Insurance Service Provider

Surgery - Maternity - Laproscopy - Endoscopy
Lab - Pharmacy - X-Ray & Scan Centre

20 படுக்கை வசதிகள் கொண்ட மகப்பேறு அறுவை சிகிச்சை
நவீன லேப்ராஸ்கோபி அறுவை சிகிச்சை வசதிகள் உண்டு.
என்டோஸ்கோபி - ஸ்கேன் - எக்ஸ்ரே - லேப் மற்றும் பார்மஸி
24 மணிநேர மருத்துவ சேவை...

புதுவை அரசு அங்கீகாரம் பெற்ற குடும்பநல மையம், (Regd.Py.06)

Dr. K.M.MAHADEVAN, M.S.,

Dr.Tmt. M.RANGALAKSHMI, M.B.B.S.DNB (O.G.)

8, SARAVANAN NAGAR, REDDIARPALAYAM, PONDICHERRY-605 010

Tel.: 0413-2290027, 2290579 Mobile : 94434-13801

Sunday Holiday

(Day and Night Service)

Peripheral Clinic:

Sri Mahalakshmi Nursing Home

76, East Street, Thirukkoilur-605 757.

Tel.: 04153-252452

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

With best compliments from :

M.K. RAJAGOPALAN

SRI BALAJI VIDYAP

MAHATMA GANDHI MEDI

PONDY-CUDDALORE MAIN ROAD, PILLA

Ph: 0413-2615449 to 458 Fax : 0413

CONSTITUENT COLLEGES O

	MAHATHMA GANDHI MEDICAL COLLEGE AND RESEARCH INSTITUTE PILLAIYARKUPPAM, PUDUCHERRY - 607 402. (Recognized by MCI, NewDelhi & Affiliated to Pondicherry University) Ph : 0413-2615449 to 2615454; Fax:0413-2615457
	INDIRA GANDHI INSTITUTE OF DENTAL SCIENCES PILLAIYARKUPPAM, PUDUCHERRY - 607 402. (Approved by DCI, NewDelhi & Affiliated to Pondicherry University) Ph:0413-2615449 to 2615454; Fax:0413-2615457
	KASTURBA GANDHI NURSING COLLEGE PILLIAYARKUPPAM, PUDUCHERRY - 607 402. (Approved by NCI, NewDelhi,& Affiliated to Pondicherry University) Ph:0413-2615449 to 2615454; Fax:0413-2615457
	SHRI SATHYA SAI MEDICAL COLLEGE AND RESEARCH INSTITUTE TIRUPORUR-GUDUVANCHERRY MAIN ROAD, AMMAPEATTAI, NELLIKUPPAM - 603 108. CHENGALPET TALUK, KANCHEEPURAM DISTRICT. Ph: 044-27440346, 27440347, 27400576 Fax: 044-2744013

SRI BALAJI EDUCATIONAL &

3A, Third Floor, Jaidurga Complex, 38/2 Firs

Ph : 044-24897206, 24894

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

N, Chairman/ Chancellor

PEETH UNIVERSITY

ICAL COLLEGE CAMPUS,

YARKUPPAM, PONDICHERRY - 607 402.

- 2615457 E-Mail : sbect@vsnl.com

OF THE TRUST (see below)

RAJIV GANDHI COLLEGE OF ENGINEERING AND TECHNOLOGY
KIRUMAMPAKKAM, PUDUCHERRY-607402
(Approved by AICTE & Affiliated to Pondicherry University)
Ph: 0413-2615086,2615308,2615309; Fax:0413-2611421

BHARATHIYAR COLLEGE OF ENGINEERING AND TECHNOLOGY
KARAIKAL- 609609, PUDUCHERRY U.T
(Approved by AICTE & Affiliated to Pondicherry University)
Accredited by NBA, New Delhi and ISO 9000-2000 Certified Institution
Ph: 04368-265915-17,266415; Fax: 04368-266016

SRI VENKATESWARA COLLEGE OF EDUCATION
194, BHARATHIYAR ROAD, KARAIKAL, U.T. OF PUDUCHERRY
(Approved by NCTE, Bangalore / Govt. of Puducherry)
Ph: 04368-221502,220171

COMPREHENSIVE HEALTH CARE SERVICES AVAILABLE AT OUR HOSPITAL

- Mammogram
- Doppler Studies
- Cath-lab
- Tread Mill Test
- Spirometry
- Fully atomized Blood Chemistry Analyzer
- FrozenAudiogram
- Fully eqipped ICU/NICU/MICU
- CT Scan
- 1.5.Tesla MRI Scan

CHARITABLE PUBLIC TRUST

st Avenue Ashok Nagar, Chennai - 600 083.

4977; Fax:044-24894977

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

With Best Compliments from :



ஸ்ரீ ஸர்வாங்கஸுந்தரீ



ஸ்ரீ ஸற்குணேச்வரர்

Sri. V.R. SANKARAN, HCL

No. 29, Annai Veedhi, Blaise Nagar,
Pakkamudayanpet, Lawspet-P.O. Pondicherry - 8.
தொலைபேசி : 0413-2240572,
செல் : 99949 60088

தொல் வினைகள் அகல :
திருஞானசம்பந்தர் அருளிய *தேவாரம்*

தோடுடைய செவியன்விடை ஏறியோர் தூவெண் மதிசூடிக்
காடுடைய சுடலைப்பொடி பூசியென் னுள்ளங் கவர்கள்வன்
ஏடுடைய மலரான்முனை நாட்பணிந்தேத்த வருள்செய்த
பீடுடைய பிரமாபுர மேவிய பெம்மா னிவனன்றே.

- அட்சயா

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

வாஸ்து விஷயங்கள்

வாஸ்து புருஷ லக்ஷணம் : புரட்டாசி, ஐப்பசி, கார்த்திகை மாதங்களில் கிழக்கே சிரஸாகவும், மார்கழி, தை, மாசி மாதங்களில் தெற்கே சிரஸாகவும், பங்குனி, சித்திரை வைகாசி மாதங்களில் மேற்கே சிரஸாகவும், ஆனி,ஆடி,ஆவணி மாதங்களில் வடக்கே சிரஸாகவும் வாஸ்து புருஷன் இடது கையை தலையின் கீழ் வைத்து சயனித்துக் கொண்டிருப்பார். அவர் திருஷ்டி பக்கமாவது, கால் பக்கமாவது வீடு கட்டிக் கொள்ளக் கூடாது.

வாஸ்து புருஷன் தலையில் வீடு கட்ட தகப்பனுக்கும், கால்களில் வீடு கட்ட மனைவிக்கும் குழந்தைகளுக்கும் நாசமும், கையிலும், முதுகிலும் வீடு கட்ட திருட்டு பயமும், வயிற்றில் வீடு கட்ட எல்லாவிதான செழிப்பும் உண்டாகும். வாஸ்து புருஷன் நித்திரை விடும் காலம் :

ஆங். தேதி	தமிழ் தேதி	கிழமை	நாழிகை	
23.04.10	சித்திரை-10	வெள்ளி	05.00	07.54 - 08.30
04.06.10	வைகாசி-21	வெள்ளி	08.00	09.58 - 10.34
27.07.10	ஆடி - 11	செவ்வாய்	02.00	07.39 - 08.10
22.08.10	ஆவணி-6	ஞாயிறு	21.00	02.23 - 02.59
28.10.10	ஐப்பசி-11	வியாழன்	02.00	06.48 - 07.24
24.11.10	கார்த்திகை-8	புதன்	10.00	10.00 - 10.34
25.01.11	தை-12	புதன்	08.00	09.12 - 09.48
06.03.11	மாசி-22	ஞாயிறு	08.00	09.12 - 09.48

ஆனி, புரட்டாசி, மார்கழி, பங்குனி மாதங்களில் வாஸ்து புருஷன் நித்திரை விடுவதில்லை. இம்மாதங்களில் மனை கோலுவது கூடாது.

அவரவர் ராசிக்கேற்ப வாசல் வைக்கும் திசை :

மேஷம், சிம்மம், தனுசு - வடக்கு திசை
ரிஷபம், கன்னி, மகரம் - தெற்கு திசை
மிதுனம், துலாம், கும்பம் - மேற்கு திசை
கடகம், விருச்சிகம், மீனம் - கிழக்கு திசை

கிருஹப்பிரவேசத்தில் ஸ்திரலக்னம் உத்தமம். உபயலக்னம் மத்யமம், ஸரலக்னம் அதமம். மனைவி கர்ப்பவதியாக இருக்கும் போது கிருஹப்பிரவேசம் செய்யக் கூடாது. கதவுகள் இல்லாமலும், மேற்கூரை கட்டாமலும், சுவர், தரை பூசாமலும், பிராமண போஜனம் செய்விக்காமலும், பஞ்ச மஹா யக்ஞம் செய்யாமலும் கிருஹப்பிரவேசம் செய்யக் கூடாது. கிருஹப்பிரவேசம், ஸ்த்ரீ நக்ஷத்திரத்திற்கு பொருத்தமான நாளில் செய்ய வேண்டும்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

With Best Compliments From :-

கல்லில் வீடு
கட்டித்தந்த தெங்கள் கைகளே !

கருணை தீபம் ஏற்றி வைத்த
தெங்கள் கைகளே !

M. SAMRAJ

Star Agent, L.I.C. H.F.L
34, Ist Main Road, Lakshmi Nagar, New Saram,
Puducherry-13
Ph : 2244339, Cell # 94432-30315, 9626262575

WE ARE ARRANGING LOAN AT THE SLASHED RATE OF INTERESTS

0.25% further Reduction for salary receiving professional
(i.e.) Doctor, Software Engineer, Auditors, etc.

We propose to construct low cost flats with quality construction at krishna nagar opp to chinmaya mission near main Road.
Booking already Started.

योगक्षेमं वहाम्यहम्

L.I.C.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

வீட்டின் அறைகள் அமைக்கும் விதம் :

வடகிழக்கு அல்லது ஈசான்யம் : தானியங்கள் சேமித்து வைக்க தகுந்த இடம்.
தென்மேற்கு என்கிற நிருருதி மூலையில் படிக்கும் அறை பாத்திர சாமான்கள் வைக்கலாம்.
தெற்கு : உணவு அறை வைக்கச் சிறந்தது.
வடமேற்கு : பூஜை அறை வைக்க ஏற்ற இடம்.
வடக்கு : பொன் நகைகள் மற்றும் பணம் வைக்க சிறந்தது.
தென்கிழக்கு : என்கிற அக்னி மூலையில் சமையலறை அமைய நன்று.
கிழக்கு : குளியல் அறை அமைக்க நன்று.
தெற்கு : காலியாக இருப்பது நல்லது.

ஒன்பது திசைகளும் அதன் அதிபர்களும்

வடமேற்கு வாயு	வடக்கு குபேரன்	வடகிழக்கு ஈசானன்
மேற்கு வருணன்	ப்ரம்ம ஸ்தானம்	கிழக்கு இந்திரன்
தென்மேற்கு நிருருதி	தெற்கு எமன்	தென்கிழக்கு அக்னி

கடக ராசியில் சந்திரன் திங்கட்கிழமை இருந்தால் கிரகப் பிரவேசம் செய்தல் ஆகாது. மனைவி கர்ப்பமாக இருக்கும் போதும் செய்யக் கூடாது.

வீட்டின் நீளம் அகலத்தைவிட 1 1/2 மடங்கு அதிகமாக இருந்தால் மிகவும் நன்மை அளிக்கும்.

நவரத்தினங்களை மோதிரமாகவோ, மாலையாகவோ செய்து அணிந்தால் ஸகல கிரஹ தோஷங்களும் திருஷ்டி தோஷங்களும் நீங்கி தெய்வ அருளும் ஐஸ்வர்யமும், தனதான்ய விருத்தியும் உண்டாகும்.

வைரம் - ஸகல நன்மை. சந்தான விருத்தி
முத்து-மன அமைதி-செல்வம் உண்டாகும்.
பவளம் மலடு நீங்கும். திருஷ்டி விலகும்.
கோமேதகம்-தனதான்யம் இன்பம் பெருகும்.
மரகதம் எல்லா வளங்களும் அமையும்.

மந்திர விளக்கம் :

மந்த்ரங்கள் வாக்கு ரூபமாக வெளிவரும்போது பிரபஞ்சத்தில் சில சலனங்கள் ஏற்படுகின்றன. மந்திர ஜபத்தில் மனிதர்கள் உள்ளத்தில் அந்த நேரம் ஓம் என்ற பிரணவ ஒலி எழும். பிரணவம் பிரம்மம் தான். எல்லா மந்திரங்களும் பிரம்ம ஸ்வரூபம் தான். எல்லா தேவர்களும் தேவதைகளும் அந்த மந்திரங்கள் எழுப்பும் சக்தியால் தான் எழுகிறார்கள். சமஸ்க்ருத பாஷையில் ஒவ்வொரு அக்ஷரமும் தெய்வீகமானது அந்த அக்ஷரங்கள் பொதுவாக "மாலினி தேவதை" எனப்படும். ஒவ்வொரு அக்ஷரத்திற்கும் பெண் தேவதைகளே உள்ளனர். உதாரணமாக கமலா, மகேஸ்வரி, சாமுண்டி நாராயணி, வைஷ்ணவி என்று அமைந்துள்ளது.

அறிந்துகொள்ள வேண்டிய "ஐந்து"

- நாள், திதி, யோகம், கரணம், நட்சத்திரம் என்ற ஐந்தும் கூடிய குறிப்பிற்கு "பஞ்சாங்கம்" என்று பெயர்.
- முத்து, வைரம், மரகதம், நீலம், பொன் ஆகிய ஐந்தும் சேர்ந்தால் "பஞ்ச ரத்தினம்".
- வாழைப்பழம், சர்க்கரை, தேன், நெய், பேரீச்சம் பழம் இவை ஐந்தும் சேர்ந்தது "பஞ்சாமிர்தம்".
- மெய், வாய், கண், மூக்கு, செவி இவை ஐந்தும் "பஞ்ச இந்திரியம்".
- நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் என இந்த ஐந்தும் "பஞ்ச பூதங்களாகும்".

ஸ்ரீ ரவீந்திரன்,
இணை ஆசிரியர்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

விக்ருதி வருடத்திய சுப முகூர்த்தங்கள்

மாதம்	தமிழ் தேதி	ஆங். தேதி	கிழமை	திதி	நக்ஷத்திரம்	யோகம்	காலை நேரம்	லக்னம்
சித்திரை	5	18.04.10	ஞாயிறு	சதுர்த்தி	ரோகிணி	சித்த	07.30-9.00	ரிஷபம்
	8	21.04.10	புதன்	சப்தமி	புனர்பூசம்	சித்த	06.00-07.30	ரிஷபம்
	12	25.04.10	ஞாயிறு	துவாதசி	உத்திரம்	அமிர்த	09.00-10.30	மிதுனம்
	13	26.04.10	திங்கள்	திரியோதசி	ஹஸ்தம்	சித்த	06.00-07.30	ரிஷபம்
	17	30.04.10	வெள்ளி	துவிதியை	அனுஷம்	சித்த	06.00-07.30	ரிஷபம்
	19	02.05.10	ஞாயிறு	சதுர்த்தி	மூலம்	அமிர்த	09.00-10.30	மிதுனம்
	27	10.05.10	திங்கள்	துவாதசி	உத்ரட்டாதி	சித்த	06.00-07.30	ரிஷபம்
வைகாசி	02	16.05.10	ஞாயிறு	திருதியை	மிருகசீரிஷம்	சித்த	07.30-09.00	மிதுனம்
	05	19.05.10	புதன்	சஷ்டி	பூசம்	சித்த	06.00-07.30	ரிஷபம்
	10	24.05.10	திங்கள்	ஏகாதசி	ஹஸ்தம்	சித்த	06.00-07.30	மிதுனம்
	12	26.05.10	புதன்	சதுர்தசி	சுவாதி	சித்த	06.00-07.30	மிதுனம்
	19	02.06.10	புதன்	பஞ்சமி	திருவோணம்	சித்த	06.30-07.30	மிதுனம்
	20	03.06.10	வியாழன்	சஷ்டி	அவிட்டம்	சித்த	07.30-09.00	கடகம்
	21	04.06.10	வெள்ளி	சப்தமி	சதயம்	சித்த	06.00-07.30	மிதுனம்
	24	07.06.10	திங்கள்	தசமி	ரேவதி	சித்த	06.00-07.30	மிதுனம்
	31	14.06.10	திங்கள்	துவிதியை	புனர்பூசம்	அமிர்த	09.00-10.30	கடகம்
ஆனி	3	17.06.10	வியாழன்	சஷ்டி	மகம்	அமிர்த	07.30-09.00	கடகம்
	7	21.06.10	திங்கள்	தசமி	சித்திரை	சித்த	06.00-07.30	மிதுனம்
	10	24.06.10	வியாழன்	திரயோதசி	அனுஷம்	சித்த	07.30-09.00	கடகம்
	18	02.07.10	வெள்ளி	சஷ்டி	சதயம்	சித்த	06.00-07.30	மிதுனம்
	31	15.07.10	வியாழன்	சதுர்த்தி	மகம்	அமிர்த	09.00-10.30	கன்னி
ஆவணி	4	20.08.10	வெள்ளி	ஏகாதசி	மூலம்	அமிர்த	07.30-09.00	கன்னி
	6	22.08.10	ஞாயிறு	திரயோதசி	உத்ராடம்	அமிர்த	07.30-09.00	கன்னி
	11	27.08.10	வெள்ளி	திருதியை	உத்ரட்டாதி	சித்த	07.30-09.00	கன்னி
	13	29.08.10	ஞாயிறு	பஞ்சமி	அஸ்வினி	சித்த	07.30-09.00	கன்னி
	14	30.08.10	திங்கள்	சஷ்டி	அஸ்வினி	சித்த	06.00-07.30	கன்னி
	20	05.09.10	ஞாயிறு	துவாதசி	புனர்பூசம்	சித்த	06.00-07.30	கன்னி
	25	10.09.10	வெள்ளி	துவிதியை	அஸ்தம்	அமிர்த	06.00-07.30	கன்னி
	27	12.09.10	ஞாயிறு	சதுர்த்தி	சுவாதி	சித்த	06.00-07.30	கன்னி
புரட்டாசி	3	19.09.10	ஞாயிறு	ஏகாதசி	திருவோணம்	அமிர்த	06.00-07.30	கன்னி
	4	20.09.10	திங்கள்	துவாதசி	அவிட்டம்	சித்த	06.00-07.30	கன்னி
	10	26.09.10	ஞாயிறு	திரிதியை	அஸ்வினி	சித்த	07.30-09.00	துலாம்
	13	29.09.10	புதன்	சஷ்டி	ரோகிணி	சித்த	07.30-09.00	துலாம்
	17	03.10.10	ஞாயிறு	தசமி	பூசம்	சித்த	07.30-09.00	துலாம்
	20	06.10.10	புதன்	சதுர்தசி	உத்திரம்	அமிர்த	09.00-10.30	விருட்
	25	11.10.10	திங்கள்	சதுர்த்தி	அனுஷம்	சித்த	06.00-07.30	துலாம்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

விக்ருதி வருடத்திய சுப முகூர்த்தங்கள்

மாதம்	தமிழ் தேதி	ஆங். தேதி	கிழமை	திதி	நக்ஷத்திரம்	யோகம்	காலை நேரம்	லக்னம்
ஐப்பசி	1	18.10.10	திங்கள்	ஏகாதசி	அவிட்டம்	சித்த	06.00-07.30	துலாம்
	4	21.10.10	வியாழன்	சதுர்த்தசி	உத்திரட்டாதி	சித்த	09.00-10.30	தனுசு
	10	27.10.10	புதன்	சதுர்த்தி	மிருகசீரிஷம்	சித்த	06.00-07.30	விருச்
	12	29.10.10	வெள்ளி	சப்தமி	புனர்பூசம்	சித்த	06.00-07.30	விருச்
	17	03.11.10	புதன்	துவாதசி	உத்திரம்	அமிர்த	06.00-07.30	தனுசு
	18	04.11.10	வியாழன்	திரயோதசி	அஸ்தம்	சித்த	09.00-10.30	விருச்
	22	08.11.10	திங்கள்	துவிதியை	அனுஷம்	சித்த	06.30-07.30	விருச்
கார்த்திகை	2	18.11.10	வியாழன்	துவாதசி	ரேவதி	சித்த	09.00-10.30	மகரம்
	3	19.11.10	வெள்ளி	திரயோதசி	அஸ்வினி	அமிர்த	06.00-07.30	விருச்
	16	02.12.10	வியாழன்	துவாதசி	சித்திரை	சித்த	07.30-09.00	தனுசு
	23	09.12.10	வியாழன்	சதுர்த்தி	உத்ராடம்	சித்த	07.30-09.00	மகரம்
	26	12.12.10	ஞாயிறு	சப்தமி	சதயம்	சித்த	07.30-09.00	மகரம்
தை	10	24.01.11	திங்கள்	பஞ்சமி	உத்திரம்	சித்த	09.00-10.30	மீனம்
	12	26.01.11	புதன்	சப்தமி	சித்திரை	சித்த	06.00-07.30	மகரம்
	24	07.02.11	திங்கள்	சதுர்த்தி	உத்திரட்டாதி	சித்த	06.00-07.30	கும்பம்
மாசி	01	13.02.11	ஞாயி	தசமி	ரோஹிணி	சித்த	06.00 07.30	கும்பம்
	02	14.02.11	திங்கள்	ஏகாதசி	மிருகசீரிஷம்	சித்த	06.00-07.30	கும்பம்
	04	16.02.11	புதன்	திரயோதசி	புனர்பூசம்	சித்த	06.00-07.30	கும்பம்
	08	20.02.11	ஞாயிறு	துவிதியை	உத்திரம்	அமிர்த	07.30-09.00	மேஷம்
	09	21.02.11	திங்கள்	திருதியை	ஹஸ்தம்	சித்த	06.00-07.30	மீனம்
	11	23.02.11	புதன்	சஷ்டி	சுவாதி	சித்த	06.00-07.30	மீனம்
	18	02.03.11	புதன்	திரயோதசி	திருவோணம்	சித்த	06.00-07.30	மீனம்
	19	03.03.11	வியாழன்	சதுர்தசி	அவிட்டம்	சித்த	07.30-09.00	மேஷம்
	22	06.03.11	ஞாயி	துவதியை	உத்ரட்டாதி	அமிர்த	07.30-09.00	மேஷம்
	23	07.03.11	திங்கள்	திருதியை	ரேவதி	சித்த	09.00-10.30	ரிஷபம்
பங்குனி	2	16.03.11	புதன்	ஏகாதசி	பூசம்	சித்த	06.00-07.30	மீனம்
	7	21.03.11	திங்கள்	துவாதசி	சித்திரை	அமிர்த	06.00-07.30	மேஷம்
	10	24.03.11	வியாழன்	பஞ்சமி	அனுஷம்	சித்த	09.00-10.30	ரிஷபம்
	17	31.03.11	வியாழன்	திரயோதசி	சதயம்	சித்த	09.00-10.30	மிதுனம்

தொகுப்பு :

K. சுந்தரராஜன் சர்மா, ஜோதிடர்.
செல் : 94427 87344, 90927 52718

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

சுப காரியங்களுக்கு அங்கீகரிக்கப்பட்டவைகள்

சுப காரியங்கள்	திதி	நக்ஷத்திரம்	லக்னம்	குறிப்புகள்
